IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**STC NO. 284/2024**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா. 1 குமரேசன்

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **16 .05.2025.**

**Accused No. 1 present. A2 absent. 317 crpc petition filed and allowed.**

**1.** நான் எம். ஏ தமிழ் படித்துள்ளேன். நான் பெருந்துறை பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எதிரிகள் எனக்கு உறவினர்கள். நான் வழக்கின் எதிரிகளுக்கு எத்தனை முறை கடன் கொடுத்து திரும்பி வாங்கியுள்ளேன் என்றால் எதிரிகள் என்னிடம் வீட்டு வேலை செய்து வந்தனர் அப்போது கடன் கொடுத்துள்ளேன் . பி கே கன்ஸ்ட்ரக்சன் யார் பெயரில் உள்ளது என்பதற்கு பதிவு சான்றிதழோ ஆர் சியோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ம.த.சா.ஆ. 9 ஆவணத்தில் இரண்டாம் எதிரி பி.கே கன்ஸ்ட்ரக்ஷனில் பங்குதாரரோ ,உரிமையாளரோ என்று குறிப்பிட்டு ஏதேனும் சங்கதி உள்ளதா என்றால் இல்லை.

**2.** நான் தாக்கல் செய்த ம.த.சா.ஆ. 1 மூன்று காசோலைகளிலும் பி. கே கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தால் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. ம.த.சா.ஆ. 3 காசோலை திருப்பப்பட்டதற்கான 3 குறிப்பாணைகளில் வங்கியின் முத்திரை உள்ளதா என்றால் இல்லை. மாற்றுமுறை ஆவண சட்டப்படி காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணையில் வங்கி முத்திரை இல்லை என்றால் சட்டப்படி வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.1 மூன்று காசோலைகளின் பின்புறமும் வங்கி கணக்கு மற்றும் பெயர் மற்றும் புகார்தாரரின் தொலைபேசி எண் யாரால் எழுதப்பட்டது என்றால் பி. கே கன்ஸ்ட்ரக்சன் தான் எழுதினார்கள். நான் இரண்டு வங்கிகளில் வங்கி கணக்கு வைத்துள்ளேன். வங்கி பரிவர்த்தனைகள் எனக்கு தெரியும். பொதுவாக காசோலை வங்கியில் செலுத்தப்படும் போது செலுத்து சீட்டுடன் வங்கியில் கொடுக்கப்படும் என்றால் சரிதான்.

3. செலுத்துச் சீட்டின் ஒரு பாகம் வங்கிக்கும் மற்றொரு பாகம்செலுத்துபவருக்கும் கொடுக்கப்படும் என்றால் சரிதான். என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும், முதல் விசாரணையிலும், புகாரிலும் வங்கி காசோலைகளில் எந்த தேதியில், எந்த இடத்தில் , எந்த வருடத்தில் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை கூறியுள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். ம.த.சா.ஆ.4 ல் மேற்படி விவரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ம.த.சா.ஆ. 4 ல் 3 காசோலைகளும் ஒன்றாம் எதிரியால் கொடுக்கப்பட்டதா அல்லது இரண்டாம் எதிரியால் கொடுக்கப்பட்டதா என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய வீடு இரண்டு அடுக்கு வீடாகும். ம.த.சா.ஆ. 9 ஆவணத்தில் இரண்டு அடுக்கு வீடு எதிரியால் கட்டப்பட்டது என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லி உள்ளேன்.

4. ம.த.சா.ஆ. 9 பக்கம் 3ல் முதல் தளம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ம.த.சா.ஆ. 4 வழக்கறிஞர் அறிவிப்பில் ஒன்றாம் எதிரி இரண்டு அடுக்கு மாடி வீடு கட்டி கொடுத்து அதிக தொகை பெற்று என்னை ஏமாற்றி விட்டார் என்ற சங்கதியை நான் கூறவில்லை என்றால் சொல்லவில்லை நான் வாய்மொழியாக சொல்லி உள்ளேன் . இவ்வழக்கு சம்பந்தமாக எதிரியும், நானும் சமரசம் ஏதேனும் பேசி உள்ளோமா என்றால் பேசி உள்ளோம். என்னிடம் காட்டப்படும் உறுதிமொழி கடிதம் நானும் எதிரியும் பெருந்துறை பேரூராட்சி துணைத் தலைவர் சண்முகம் முன்னிலையில் எழுதிக் கொண்டது என்றால் சரிதான் . மேற்படி **உறுதிமொழி கடிதம் நகல் எ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. ம.த.சா.ஆ. 1 3 காசோலைகள் எந்த வருடத்தில் கொடுக்கப்பட்டது என்றால் 2023 ஆம் வருடம் கொடுக்கப்பட்டது. எ.த.சா.ஆ. 1 உறுதிமொழி ஆவணத்தில் 09.10.2022 ஆம்தேதிக்கு முன்னரே காசோலைகள் என்னிடம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எதிரி இரண்டு மூன்று தடவை என்னிடம் கொடுத்து காசோலைகளை திரும்பப் பெற்றுள்ளார். பெருந்துறை பேரூராட்சி துணைத் தலைவர் சண்முகத்தை எதிர் தரப்பு சாட்சியாக விசாரிக்க எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. நான் எதிரிகளுக்கு எத்தனை முறை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் இரண்டு முறை அனுப்பியுள்ளேன். நான் எந்த தேதியிட்ட அறிவிப்பினை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்து உள்ளேன் என்றால் 25.03.2023 தேதியிட்ட அறிவிப்பை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

6. ம.த.சா.ஆ. 4 21.03.2023 தேதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றொரு வழக்கறிஞர் அறிவிப்பின் தேதி ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு நான் எதிரிகளுக்கு அனுப்பியதா என்று எனக்கு சரியாக தெரியவில்லை. என்னுடைய தற்போதைய வழக்கறிஞரின் பெயர் ,முகவரி என்றால் திருப்பூர் வழக்கறிஞர் பெயர் சௌமியா மற்றும் நந்தகுமார். என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு நந்தகுமார் மற்றும் சௌமியா வழக்கறிஞரால் அனுப்பப்பட்டது. நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள முகவரியில் தான் தற்போது குடியிருந்து வருகிறேன். காசோலைகளின் செலுத்து சீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு காசோலைகள் எதிரிகளால் வெற்றுக் காசோலையாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. காசோலையின் பின்னால் எழுதப்பட்ட கையெழுத்தையும் செலுத்து சீட்டில் உள்ள கையெழுத்தையும் கையெழுத்து நிபுணருக்கு ஒப்பிட அனுப்பி வைப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் இல்லை.

7. நான் இவ்வழக்கில் 3 லட்சம் ரூபாய் தொகை கடனாக பெற்று இருப்பதாகவும் அதற்கு மாதம் பத்தாயிரம் வட்டி செலுத்துவதாகவும் கூறியுள்ள விவரத்தில் யாரிடம் கடன் பெற்றேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ம.த.சா.ஆ. 4 வழக்கறிஞர் அறிவிப்பில் பக்கம் 3 ல் நான் கடன் பெற்று வட்டி கட்டியதாக குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான். ம.த.சா.ஆ. 1 மூன்று காசோலைகளிலும் எதிரி பிரகாஷ் பெயரோ அல்லது பி. கே கன்ஸ்ட்ரக்ஷன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான் ஆனால் பி .கே கன்ஸ்ட்ரக்ஷன் சார்பாக தான் கொடுத்தார்கள்.

8. நான் அரசு ஊழியர் என்பதால் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் எதிரிகளுக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் தொகையை நான் வருமான வரியில் காட்டியுள்ளேன் என்றால் காட்டி உள்ளேன். எந்த வருடத்தில் நான் காட்டியுள்ளேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. வருமான வரி செலுத்திய கணக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தேடிப் பார்த்தால்தான் தெரியும். நான் எவ்வளவு தொகை கடனாக கொடுத்தேன் என்றால் தொகை ரூபாய் மூன்று லட்சம் கொடுத்தேன். நான் இந்த வழக்கினை கடன் தொகை மற்றும்

கட்டுமான இழப்பிற்கு சேர்த்து காசோலைத் தொகை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரிதான். கைமாற்றக் கடன் இருக்கு மட்டும் மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் தொகை பெற முடியும் என்றாலும் இழப்பீட்டிற்கு இந்த சட்டத்தின் கீழ் பெற முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரி தரக்குறைவாக கட்டடம் கட்டினார் என்பதற்காக நான் ஏதேனும் புகார் அல்லது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் புகார் ஏதும் கொடுக்கவில்லை.

9. வீடு பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது மற்றும் தரக்குறைவாக கட்டப்பட்டுள்ளது என்பதனை காண்பிப்பதற்கு நீதிமன்றத்தில் புகைப்படம் அல்லது ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை. எனக்கும் இவ்வழக்கின் இரண்டாம் எதிரிக்கும் எவ்விதமான நேரடி வரவு செலவு இல்லை என்றால் சரியல்ல. பி. கே கன்ஸ்ட்ரக்சன் இரண்டு எதிரிகளுக்கும் பொதுவானது என்று என்னிடம் சொன்னார்கள். காசோலை கொடுத்த நபர்களின் சம்மதம் இல்லாமல் காசோலை நிரப்பினாலோ அல்லது திருத்தம் செய்தாலோ மேற்படி காசோலை மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

10. ஒன்றாம் எதிரியால் பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்ட காசோலையை வைத்து இரண்டாம் எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.1 மூன்று காசோலைகளுக்கும் சட்டப்படியான மறுபயன் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி காசோலைகள் காலம் கடந்த காசோலைகள் என்றால் சரியல்ல. பொய் வழக்கு என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை